# துர்முகி வருஷ

## சித்திரைப் புத்தாண்டு பலன்கள்
## (2016 - 2017)

### 12 இராசிகளுக்குமான பலன்கள்



சர்வசக்தி வெளியீடு

சோதிடர் தி. தவரத்தினம்
சடையாளி, காரைநகர்.
072 366 9014

50/=

# துர்முகி வருஷ
# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்
# [2016 - 2017]

## 12 இராசிகளுக்குமான பலன்கள்
## (வாக்கிய பஞ்சாங்க கணிப்பிலான பலன்கள்)


கணித்தவர்:
சோதிடர்
**தி. தவரத்தினம் B.A, PGDE, Dip. in. FSC.**
சர்வசக்தி வெளியீடு,
சர்வசக்தி சோதிடம்,
சடையாளி,
காரைநகர்.

# மகா யாகம்

காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய ஆலயம் வருடாந்த மகோற்சவம் நாட்டு மக்கள் நன்மை கருதி ஆரம்பம்.2016.05.12 தொடக்கம் 2016.05.21 வரை

அனைவரும் வருக இறையருள் பெறுக.

(யாகத்திற்கு சிறப்பு பெற்ற விசேட தலம் பக்தர்களுக்கான வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.)

## மனையடி சாத்திரம்

இல்லங்கள் நன்றே அமையின் இங்கிதமான வாழ்வு உண்டாம். நீங்கள் வாழும் மனை சரியான சாஸ்திர விதி முறையின் கீழ் வீடுகள், கிணறுகள், கழிவுக்குழிகள் அமைவது அவசியமானதாகும்.

புதுமனை அமைக்கும் போது இருக்கும் மனைகளின் அமைப்பின் நிலையை அறிமின் நலம் உண்டாம். வீட்டுவளவு நிலப்பிரமாணம், வீட்டு நீள அகலம் என்பன நன்றாக அமைய வேண்டும்.

உதாரணமாக 12அடி புத்திரபாக்கிய குறைவையும் 13அடி துர்பலனையும் 14அடி பகையையும் 15அடி துன்பத்தையும் கொடுக்கும் என்பதனால் இதில் அவதானம் என்பது சோதிட ஆய்வு உண்மையாகும்.

காலநிலைக்கும் தேச அமைப்புக்கும் ஏற்ப கட்டிடக்கலையின் தோற்றம், அமைப்பு, அடி, அகலம், திசைகள் என்பன வேறுபட்டுக் காணப்படலாம்.

"மனை செய்வது போல்
மக்கள் செய்யார்"

# சோதிட அன்பர்களுக்கு...

நம் முன்னோர் இறையருளினால் சோதிட அறிவைக் கொண்டு பின் நடப்பவற்றை முன்னறிந்து கொள்ளும் பஞ்சாங்க முறையை வகுத்தனர்.

அண்டத்திலும், பூமியிலும் சதா மாற்றங்கள் ஏற்பட்ட வண்ண முள்ளது. அதற்கு காரணர்களாக நவக்கிரகங்கள் விளங்குகின்றன.

இன்றைய நவீன விஞ்ஞான உலகு என்று கூறிக்கொள்ளும் உலகறிவாளர்களால் இயற்கைப் பஞ்சபூதசக்திகளை முழுமையாக இயக்கவோ அல்லது கட்டுப்படுத்தும் ஆற்றலோ கொண்டவர்களாக இல்லையென்பது உண்மை.

இங்கே கூறப்பட்ட இராசிகளுக்கான பலாபன்கள் கோட்சார ரீதியாக பொதுவானவையே. மனித வாழ்வின் முன் செய்தவினை தற்போதைய வாழ்வின் செல்நெறி ஆகியன பலாபலன்களை ஒவ்வொருவருக்கும் வேறுபடுத்தி வழங்கும்.

அறுபது தமிழ் வருட்களின் பலாபலன்கள் பொதுவானவையாகவும் மாறுபாடுடையனவாகவும் காணப்படும். ஒவ்வொரு கணப்பொழுதும் நகரும் கலியுகத்திலே காலக் கண்ணாடியான சோதிடத்தினை நன்கறிந்த தெய்வீக சோதிடர்களிடம் பலன் அறிந்து நன்மையடையலாம்.

மனித முழு ஆயள் 120 ஆகும். அதிலே வரும் கிரகமாற்றங்கள் மனிதனையும், பூமியையும் ஒரே மாதிரி இருக்க விடுவதில்லை. எனவே ஒருவரின் ஆயுள், ஆரோக்கியம், தனதானிய, மனமகிழ்வைப் பெற நாம் சோதிட வழி முறைகளை பின்பற்றலாம்.

எனவே நவநாயர்களை இயக்கும் மேலான இறைவனை வணங்கி எமது நற்பண்பு வாழ்க்கை முறைமூலம் எமது வாழ்வை வளப்படுத்திக் கொள்வோமாக.

*எல்லோருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்...*
*எல்லா நலமும் பெற இறைவனை வணங்குவோமாக.*

**சோதிடர்**
**தி. தவரத்தினம் B.A, PGDE, Dip. in.FSC.**
**சடையாளி, காரைநகர்.**
**20.02.2016**

# துர்முகி வருஷ

# சித்திரைப்புத்தாண்டுப் பிறப்பு விளக்க பலாபலன்கள்

## (2016 சித்திரை - 2017 பங்குனி)

சூரிய பகவான் மீன இராசியில் இருந்து தனது உச்ச வீடாகிய மேட இராசிக்கு செல்வதே புத்தாண்டு பிறக்கும் நேரமாகும்.

சூரியன் மேட இராசியில் பிரவேசிக்கும் காலம் முதல் வசந்த காலம் ஆரம்பிக்கின்றது.

பிரமன் உலகைப் படைத்தது சித்திரை 1ம் திகதி என்று புராணங்கள் கூறுகின்றது. தமிழ் வருடங்கள் 60 ஆகும். இவை மாறி மாறி வந்தாலும் பொதுப்பலன்கள் காலமாற்றத்துக்கு ஏற்ப வேறுபட்டு நடைபெறும். உதாரணமாக வருடம் பிறக்கும் நாள், நவநாயகர்கள் போன்றவையும், காலமாற்றமும், புத்தாண்டு பலனும் ஒன்று சேர்ந்து மனித உயிரின் பலன்களையும், உலக மாற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

சூரிய, சந்திர போக்கை ஆதாரமாக வைத்து நம் பெரியோர் காலக் கணக்கை கணித்துள்ளனர். சூரியனை வைத்து மாதமும் (சௌரமானம்) சந்திரனை வைத்து (சந்திராணயம்) என்றும் கணித்துக் கொள்வர்.

**துர்முகி வருஷம் 13.04.2016 புதன்கிழமை முன் இரவு 06.36 மணிக்கு** பூர்வபக்க ஸப்தமி திதியும், திருவாதிரை நான்காம் பாத நட்சத்திரமும், துலா லக்கினமும் கூடிய சூரியஒரை நேரத்தில் நட்சத்திர பட்சியாகிய ஆந்தையில் துர்முகி வருஷம் பிறக்கிறது.

(14.04.2016 வியாழக்கிழமை சித்திரை 01 ஆம் திகதி புதுவருட கொண்டாட்டம்.)

## விஷு புண்ணியகாலம் 13.04.2016
## பிற்பகல் 02.36 தொடக்கம் இரவு 10.36 வரை

## தோஷ நட்சத்திரம்:-

மிருகசீரிடம் 3ம், 4ம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 பாதம் சுவாதி, விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை, சதயம் இவ்நட்சத்திரத்தில் பிறந்தோர் மருத்துநீர் வைத்து நீராடி தோஷ நிவர்த்தி பெறுக.

## கை விசேட காலம்:-

**16.04.2016 (சனிக்கிழமை) இரவு 10-39 தொடக்கம் 12-23 வரை**
**18.04.2016 (திங்கட்கிழமை) பகல் 09-07 தொடக்கம் 09-35 வரை**
**09-47 தொடக்கம் 11-46 வரை**

## வித்தியாரம்பம்:-

**28.04.2016 காலை 09.28 தொடக்கம் 11.18 வரை**
**04.05.2016 காலை 08.30 தொடக்கம் 10.42 வரை**

## வருட சிறப்பு வர்ணம் :-

**பச்சை, வெள்ளை**

# துர்முகி வருஷ பொதுப் பலன்கள்

❖ விவசாய விருத்தி, தானிய வகை விளைவு அதிகமாகும்.

❖ இராஜாங்க கலகங்கால் புதிய சூழல் உருவாகுதல்,

❖ வைகாசி, ஆனி, கார்த்திகை மாதங்களில் உலக இராஜங்க போட்டிகள் உருவாகுமாம். (போர்சூழல்)

❖ வறண்ட காற்று அதிகம்

❖ பின் மழை அதிகம்

❖ விஞ்ஞான தொழில்நுட்பவிருத்தி அதனால் பூமியில் தாக்கம்

❖ பூமியில் J. A. C. ஆகிய எழுத்துக்களைக் கொண்ட நாடுகளுக்கு இயற்கை, செயற்கையான பாதிப்புக்களுண்டாம்.

❖ இலத்திரனியல் பொருட்களினால் தாக்கம் உண்டாம்.

## துர்முகி வருஷ இராசிச் சக்கரம்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன்<br>புதன் | | சந்திரன் |
| கேது | | | |
| | | | குரு<br>ராகு |
| | செவ்வாய்<br>சனி | லக் | |

## ஆதாய விரய பலன்

| இராசிகள் | பலாபலன்கள் | ஆதாயம் | விரயம் |
|---|---|---|---|
| மேடம் | நஷ்டம் | 2 | 8 |
| இடபம் | நஷ்டம் | 11 | 14 |
| மிதுனம் | சுகம் | 14 | 11 |
| கடகம் | அதிக இலாபம் | 14 | 2 |
| சிங்கம் | இலாபம் | 11 | 5 |
| கன்னி | சுகம் | 14 | 11 |
| துலாம் | நஷ்டம் | 11 | 14 |
| விருச்சிகம் | அதிக நஷ்டம் | 2 | 8 |
| தனு | சமசுகம் | 5 | 14 |
| மகரம் | சமசுகம் | 8 | 8 |
| கும்பம் | சமசுகம் | 8 | 8 |
| மீனம் | அதிகநஷ்டம் | 5 | 14 |

# மேடம்



*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)*

நீங்கள் விடாமுயற்சியாளர்களாகவும், சமூக மதிப்பு, கௌரவம் உடையவர்கள். சிலர் முற்கோபமும் அகங்காரத் தன்மையும் உடையவர். துணிச்சல், வாக்கு சாதுரியமும் பரந்து பட்ட உலகறிவும் சமூக பொறுப்புக்கான மேம்பாட்டில் ஈடுபடும் தன்மை கொண்ட உங்களுக்கு, இவ்வாண்டு இராசிப்பலன்கள் வருட ஆரம்பத்தில் சுமாரான பலன்களையும் வியாழ மாற்றத்தின் பின் மத்திம பலன்களையும் கொடுக்கும். கருமங்களை இப்போதே துணிந்து செய்யுங்கள். நட்ப்புக்களின் ஆசீர்வாதமும் அரச உதவிகளும் நாடிவரும் காலமாகும்.

வியாழபகவான் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் காலமான ஆடியின் பின் ஆரோக்கியக் குறைவுக்கான காலமாவதால் வியாழபகவானை அர்ச்சித்து தீயபலன்களைக் குறைத்துக் கொள்க.

08.01.2016ல் ஏற்பட்ட இராகு கேது பெயர்ச்சியினால் ராகு 5ம் இடத்திலும் கேது 11ஆம் இடத்திலும் சஞ்சாரம் செய்கின்றனர். இதனால் ஏற்ற இறக்கமான பலன்களே காணப்படும். உடல் ஆரோக்கியத்தில் வயிறு சம்பந்தமான நோய்களுக்கு நாக வழிபாட்டை மேற்கொள்ளவும். சிலருக்கு திருமண சுப காரியங்கள் என்று ஆடம்பர செலவுகள் உருவாகுமாம்.

சனிபகவான் அட்டமத்தில் இருப்பதால் வீண் சச்சரவுகள், செலவுகளிலும் நிலபுலன்களின் முதலீடுகளிலும் அவதானம் தேவை. தொழில் தானம் பலப்பட்டு நன்மைகள் உருவாகும்.

பிறக்கும் புது வருஷம் சுபகாரிய நன்மைகள், அரச உதவிகள், வெளியிடத்துப் பொருட் சேர்க்கை, புனித யாத்திரை, பிரசித்தமான தொழில் மாற்றங்களைக் கொடுக்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு:-**

உத்தியோக உயர்வு உண்டாகும். வேலைப்பழு அதிகரிக்கும். அயல் நாடுகளுக்கு பிரயான வாய்ப்பு உண்டாகும்.

**மாணவர்களுக்கு:-**

உடல் அசதி, மறதி என்பவற்றுக்கு ஊக்கமும், போசனையான உணவும் உண்டு அதிக அக்கறை காட்டவும். சிலருக்கு உயர்கல்வி வாய்ப்பு உண்டாகும்.

**பெண்கள்:-**

வீட்டில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறும். குழந்தைப்பேறு கிட்டும். தகப்பன், தாயின் ஆதரவு அதிகரிக்கும்.

**அரசியல் வாதிகள்:-**

தலைமையின் விருப்பின் பேரில்புதிய பொறுப்புக்கள் தேடி வரும். சலசலப்புக்களுக்கு அஞ்சாது சேவையாற்றுவீர்கள்.

**அச்சுவினி:-**

அதிகாரப்பதவி, தெய்வானுகூலம், திரவிய இலாபம், விரும்பியவை கிடைக்கும்.

**பரணி:-**

மனயோசனைகள் குடும்பநன்மை, தொழில் விருத்தி

**கார்த்திகை:-**

இனசனநன்மை, செலவு அதிகமாதல், அறிவாற்றலால் நன்மை

# இடபம்



*(கார்திகை 2, 3, 4ம் பாதம், ரோகினி,*

*மிருகசீரிடம் 1ம் பாதம்)*

நீங்கள் இனிமையாகப் பழகுபவர்களாகவும், நல்ல உழைப்பாளிகளகவும் திட்டமிட்டு காரியங்களை செயலாற்றுவராகவும், பகை வரை வெல்லும் பலம் கொண்டவராகவும், கற்பனைத் திறன் நிறைந்தவராகவும் விளங்குவீர்கள்.

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு சாதமாக அமைந்து நற் பெயரை வழங்கும். புதிய மனை பூர்வீகச் சொத்துக்கள் சேயர்க்கை சுப மங்கள யோகம் கூடிவரும்.

வியாழபகவான் 5ம் இடத்திற்கு வந்து அற்புதமான பலன்களை வழங்குவார். பொருள் இலாபம் கிடைக்கும். திருமணயோகம் உண்டாகும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

08.01.2016 ராகு, கேது மாற்றங்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நிலையை உருவாக்கும். போட்டி பொறாமைகளை ஏற்ப்படுத்தும் நிலையால் முன்பின் தெரியாதவர் களிடம் அவதானமாக இருக்கவும். உஷ்ணம் தொடர்பான ரோகங்கள் 4ல் இராகுவில் உருவாகும். கேதுவின் 10ஆம் இடச்சஞ்சாரத்தால் பொருள்களில் விழிப்பாக இருக்கவும்.

சனிபகவான் ஏழாம் வீடான விருச்சிகத்தில் இருப்பது சிறப்பான பலாபலன்களை வழங்குவதில் தாமதங்களை காட்டினாலும் இவ்வருடம் உங்களுக்கு குடும்பநன்மை, சுப செலவுகள், நிலையான சொத்துச் சேர்க்கைகளை உருவாக்கும்.

பிறக்கும் புத்தாண்டு திருமண அனுகூலங்கள், வழக்குகளில் வெற்றிகள், செல்வம், செல்வாக்கு, இறையருள் என்பன பெறும் பொற்காலமாகும்.

**உத்தியோகத்தர்:–**

உயர் அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். ஊதிய உயர்வு உகந்த இடமாற்றங்கள் ஏற்படும்.

**வியாபாரிகள்:–**

வர்த்தக நடவடிக்கைகளில் நல்ல முன்னேற்றம் தொழில் இடையூறுகள் மறையும் வெளிநாட்டு நன்மை உண்டாகும்.

**மாணவர்கள்:–**

ஆராய்ச்சிக்கல்வி, கல்வியும், தொழிலும் சேர்ந்ததான கற்கைகள், வெளிநாட்டுப் பயணம் அறிவுத்திறன் அதிகரிக்கும் காலமாகும்.

**பெண்கள்:–**

திருமண அனுகூலம், குடும்ப நன்மை, புதுவீடு வாங்குதல், குடிபுகுதல், பணப்புழக்கம் என்பன ஏற்படும்.

**அரசியல்வாதிகள்:–**

அந்தஸ்து உயரும், பதவிகள் தேடி வரும். பேச்சுக்கள் அல்லது கருத்துக்களால் விரோதங்கள் உருவாகலாம். அவதானம் தேவை.

**கார்த்திகை 2ம்,3ம்,4ம் பாதம் :–**

காரிய அனுகூலம், அதிக செலவு, மத்திம இலாபம்

**ரோகினி:–**

உடல் உபாதைகள், மனச்சஞ்சலம், திரவிய இல்ாபம், காரியத் தடை

**மிருகசீரடம்:–**

மத்திம சுகம், குடும்பநன்மை, நல்லோர் உதவுதல்.

# மிதுனம்



*(மிருகசீரிடம் 3ம், 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம், 3ம் பாதம்)*

நீங்கள் எண்கணித தேர்ச்சி வல்லமை கொண்டவர். மதப்பற்றும் சாத்திரசம்பிரதாயங்களைமதிக்கும் பண்பும் உள்ளவர். நவீன விஞ்ஞான தொழில்கள் உங்களை நாடிவரும். படைப்பாற்றலால் சிலர் முன்னேற்றம் காண்பீர்கள்.

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு பொருளாதார நிலையை உயர்த்தும். நோய்களில் இருந்து சுகம் கிடைத்தல், ஆண்மீக நாட்டம் என்பவற்றை உருவாக்கும்.

வியாழ பகவான் 4ம் வீட்டில் சஞ்சாரம் செய்வதனால் பணம் கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. அரோக்கியத்தில் அவதானம் தேவை. உற்றார் உறவினர் பகை பாராட்டி குடும்பத்தில் குழப்பங்களை உருவாக்கலாம். அவதானம் தேவை.

08.01.2016ல் இராகு, கேது மாற்றங்கள் 1½ வருடங்களுக்கு சுமாரான பலன்களையே வழங்குவார். 3ல் ராகு 9ல் கேதுவும் சஞ்சாரம் செய்வதனால் இறைவழிபாடுகளில் நாட்டமும் உடல் ஆரோக்கியத்தில் கரிசனையும் காட்ட வேண்டியகாலமாகும். அலைச்சல்கள் அதிகரிக் கலாம். கூரிய ஆயுதங்களில் அவதானம் தேவை.

சனிபகவான் 6ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்வதனால் மிகச் சிறப்பான பலன்கள் நடக்கும். வெளிநாட்டு யோகம், தனதானிய விருத்தி.குடும்ப அனுகூலங்கள் ஏற்படலாம்.

பிறக்கும் புத்தாண்டு உங்களுக்கு குடும்ப ஆதரவும் இராஜங்க நன்மைகளையும் வாகன வசதிகள், சகோதர உதவிகள், முகவசீகரத்தையும் ஏற்படுத்தலாம்.

**உத்தியோகத்தர்:-**

பணியிடமாற்றம், புதிய பதவிகள், பொருளாதாரவிருத்தி, தேவையான விடுமுறைகள் என்பன கிடைக்கும்.

**வியாபாரிகள்:-**

வர்த்தக நடவடிக்கைகளில் நல்ல முன்னேற்றமும் புதிய தொழில் விஸ்தரிப்புக்களும், பாகப்பிரிவினைகளும் நன்றே உருவாகலாம்.

**மாணவர்கள்:-**

மாணவர்கள் கல்வியில் மிகுந்த ஊக்கம் எடுக்க வேண்டும். நண்பர்களினால் அனுகூலம் உண்டாகலாம்.

**பெண்கள்:-**

திருமணத்தடைகள் அகன்று திருமண அனுகூலம் ஏற்படலாம். கையில் பணப்புழக்கம், புத்திரபாக்கிய விருத்திகளும் ஏற்படலாம்.

**அரசியல் வாதிகள்:-**

பல ஊர்களுக்கு சுற்றுப்பயணம், பெறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆண்டின் பிற்பகுதியிலேயே சாதகமான காலமாகும்.

**மிருகசீரிடம்:-**

ஊக்கமான செயலின் ஈடுபாடு இனசனநன்மை, காரியநன்மை திரவிய இலாபம்.

**திருவாதிரை:-**

தொழில் விருத்தி, தானதருமச் செயல், கடன்படுதல், காரியசித்தி

**புனர்பூசம்:-**

காரிய தாமதம், உடல்நிலை, அவதானம், தனதானிய நன்மை.

# கடகம்



(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)

நீங்கள் அலைபாயும் மனநிலையுடையவர்கள், வாழ்க்கையில் உயரவேண்டும் என்ற மனநிலை. கலைஞானம் உடையவர். யாரை அணுகினால் காரியம் சாதிக்கலாம் என்று பழகி நண்பராக்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள்.

இந்தவருட ஆரம்பத்தில் உயர்ந்த இலட்சியத்துடன் எண்ணித் துணியும் கருமங்கள் வெற்றியளிக்கும். செய் தொழில் விருத்தி உண்டாகலாம். ஆதாயம் அதிகமாகும். திருமண சுபகாரிய நிகழ்வுகள் உண்டாகலாம்.

வியாழ மாற்றத்தின் பின்பு மூன்றாம் இடத்தில் குரு. தொழில் கஷ்டம், மனஉழைச்சல், பல இடையூறுகள் ஏற்படலாம். வியாழன் ஜாதகத்தில் நல்ல நிலையில்இருந்தால் தாக்கம் குறைவாக காணப்படலாம்.

08.01. 2016ல் இராகு, கேதுபெயர்ச்சியினால் இராகு 2ம் இடத்தில் வருவது செல்வச்செழிப்பு இனிதே வந்து சேரும். நீண்டநாள் எதிர்பார்ப்புக்கள் நிறைவடையும். பூமி சேர்க்கை, நண்பர்கள் உதவி தொழில் விருத்தி அதிகரிக்கலாம்.

கேது அட்டமத்தில் இருப்பதினால் சுபவிரயங்கள் ஏற்ப்படும். வீண் வாதங்களில் ஈடுபடவேண்டாம். சத்திர சிகிச்சை என்றால் ஜோதிட ஆலோசனை பெறுக.

இவ்வாண்டில் சனி 5ல் இருப்பு. திருமணத்தடை நீங்கும். தொழில் நன்மை உண்டாகலாம். சளித்தொலைக்கு மருத்துவம் செய்க.

பிறக்கும் வருடம் பணம், பதவி, புகழ். மனஅமைதி என்பவற்றைக் கொடுத்து யோகம் ஏற்படுத்துமாம்.

**உத்தியோகத்தர்:-**

பதவிகள், புதிய பொறுப்பு, சம்பளஉயர்வு, வெளியிடத்துப் பிரயாணம், அரசு நலன்கள் உண்டாகலாம்.

**வியாபாரிகள்:-**

வியாபரம், கூட்டுமுயற்சிக்கு நன்மை அளிக்கும். நீர் வர்த்தகம் சிறப்பைத்தரும். அனுகூலமான காலம்.

**மாணவர்:-**

பரீட்சையில் சித்தி உயர்கல்வி வாய்ப்பு, இடமாற்றங்கள், கல்வி உயர்வு உண்டாகலாம்.

**பெண்கள்:-**

சுபசெலவு அதிகரிக்கும், திருமண யோகம் உண்டாகலாம், வெளியிடத்துப் பிரயாணத்தில் அவதானம் தேவை.

**அரசியல்வாதிகள்:-**

வருட ஆரம்ப நற்பலனும் மத்தியில் இருந்து போராட்டமான எதிர் நிலைகளும் உண்டாகலாம்.

**புனர்பூசம்:-**

திரவிய இலாபம், பிரயானத்தில் அவதானம், தொழில் சிறப்பு.

**பூசம்:-**

சினேகநன்மை, தொழில் நன்மை, குடும்பநன்மை, இட்சுமீகரம், அறிவால் நன்மை.

**ஆயிலியம்:-**

நினைத்தவை பலிதமாதல், வரவுக்கு மீறிய செலவு, பொருட் களில் அவதானம் தேவை.



# சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)*

நீங்கள் சோர்வடையாத கடின உழைப்பாளிகள் நெஞ்சுறுதியும் தைரியமும் மிக்கவர்கள். தலைமை தாங்கும் பண்பும் இயந்திர சாதனங்களில் தொழில் பெறும் யோகமும் உடையவர்கள். சாந்தகுணமும், கோபமும் இடையிடையே சூழ்நிலைக்கு ஏற்ப மாறிவரும். எதிரிகளை வெல்லும் விடாமுயற்சியாளர் ஆகிய உங்களுக்கு!

இவ்வாண்டு ஆரம்பத்தில் மத்திம பலன்களையும் ஆனியின் பின் சாதனைகள் படைக்கும் பொற்காலமாகும். உடல் ஆரோக்கிய பாதிப்புக்கள் படிப்படியாக நன்னிலைக்கு வரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். பொருளாதார வளம் அடைவீர்கள். புத்திரபாக்கியம் பூர்வீக சொத்துக்கள் கிடைக்கலாம்.

வியாழ மாற்றத்தின் பின்பு எதிர்பாராத பணவரவு, விரோதிகள் தொல்லை மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

01.08.2016ல் இராகு, கேது பெயர்ச்சியினால் ஜென்மராகு புதிய முயற்சிகள், அயராத உழைப்பு, திடீர் பயணங்கள், அரச அனுகூலம், பிரபலங்களின் சந்திப்பு. சுப செலவுகளை உண்டாக்கலாம்.

கேது 7ஆம் இடத்தில் சஞ்சரத்தால் பணயங்கள் அதிகரிக்கும். உத்தியோக உயர்வுண்டாகலாம், பலவழிகளில் வருமானம், திருமணவாய்ப்பு உண்டாகலாம்.

சனிபகவான் நிலை சிறப்பானது என்று கூறிவிடமுடியாது. உணவு, கொடுக்கல்வாங்கல்களில் அவதானம் தேவை.

பிறக்கும் ஆண்டு சுப மங்களமான நிலையும், உறவினர், நண்பர்களிடையே உறவுகள் நன்னிலையடையலாம்.

**உத்தியோகத்தர்:–**

ஊதிய அதிகரிப்பு, பதவி உயர்வுகள், வீடு, வாகனம் கிடைக்கப்பெறலாம்.

**வியாபாரிகள்:–**

வியாபாரவிருத்தி இரட்டிப்பாகும். புதிய ஒப்பந்தங்கள், வியாபார விருத்தி உண்டகலாம்.

**மாணவர்கள்:–**

கல்வியில் உயர் சித்திகளை அடைவர். வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கிடைக்கலாம்.

**பெண்கள்:–**

திருமண வாய்ப்புக்கள் கூடிவரும், மகப்பேறு உண்டாகலாம். வீடு, புதிய ஆபரணங்கள் சேர்க்கை, பணம் பொருள், பிரயாணங்களில் அவதானம் தேவை.

**அரசியல்வாதிகள்:–**

அதிகாரவிருத்தி, பொது மக்கள் ஆதரவு அதிகரித்தல், புதியபதவி, அரச ஆதரவுகள் உண்டாகலாம்.

**மகம்:–**

யோசனைமிகுதி, இலாபம் குறைதல், தொழில் நன்மை, பிற்பகுதி காரியம் பலிதம், திரவிய நன்மை..

**பூரம்:–**

தனதானி நன்மை, காரிய அனுகூலம், சுபநிகழ்வுகள், தொழில் நன்மை.

**உத்தரம்:–**

உல்நோய், மனத்தாக்கம், கடன்படல் செலவு, பிற்பகுதி திரவிய இலாபம், சுபமங்கள நன்மை.



# கன்னி

*(உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதம்,*

*அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம், 3ஆம் பாதம்)*

நீங்கள் கணித விஞ்ஞான பொருளியல் புலமைசாலிகள், அழகுடையவர்கள், ஆடம்பரக்காரர், பேச்சில் ஆதிக்கம் இருக்கும். அதிகம் கதைக்க மாட்டீர்கள். பொறிகளில் வேலை செய்தல், கல்வியுடனான தொழில் வாய்ப்புகள் உடையவர். மொழிப்புலமை, பிறருக்கு உபதேசம் செய்வதில் வல்லவரான கன்னி இராசி அன்பர்களே!

பிறக்கும்புத்தாண்டு எடுத்த காரியங்களில் வெற்றியும், உடல் ஆரோக்கியத்தையும் படிப்படியாக வழங்கும். வழக்குகள் சாதகமாக அமையும். புகழ் தேடிவரும். தீர்த்தயாத்திரை, தெய்வீக நாட்டம் ஏற்படலாம்.

வியாழ மாற்றத்தின் பின் முன்னைய வருடத்தைவிட ஓரளவு நன்மை உண்டாகலாம். ஆயினும் தொழிலில் தேக்க நிலையும் குடும்பத்தில் சலனத்தையும் உருவாக்கும் காலம் ஆகையால் குரு வழிபாட்டை மேற்கொள்ளவும்.

இராகு 12ம் இடத்திலும், 6ம் இடத்தில் கேதுவும் முறையே நின்று பெண்களால் பிரச்சனையையும், உடலில் கட்டிகள், பித்தசம்பந்தமான நோய்களையும் காட்டலாம். கேது பகவான் பொன் பொருள் சேர்க்கை, வாகன நன்மைகளை உண்டாகலாம்.

சனி பகவானால் சகோதர நன்மை, பதவிஉயர்வுகள், கால் நடைகளால் இலாபம். எடுத்தகாரியங்களில் வெற்றியும் உண்டாகலாம்.

பிறக்கும் புத்தாண்டு நல்ல சந்தர்ப்பங்களையும் சாதகமாக மாற்றிவழங்குமாம்.

**உத்தியோகத்தர்:-**

புதியபதவி அந்தஸ்து உயரும் மேலதிகாரிகளின் அனுகூலம் கிடைக்கும். தலைமைப் பெறுப்பை ஏற்று நடத்தும்பணியில் அமர்த்தப்படுவீர்கள்.

**வியாபாரிகள்:-**

வெளிநாட்டு வர்த்தகத்துறையினருக்கு அதிகநன்மை, இலாபம் கிடைக்கும். தொழில் போட்டிகளை சமாளித்து வெல்லுவீர்கள்.

**மாணவர்கள்:-**

அவதானம் தேவை. பொருள்களில். உடலில் தாக்கம் ஏற்படலாம். தகுந்த மருத்துவ ஆலோசனை பெறுவது நலம்.

**அரசியல்வாதிகள்:-**

முயற்சிகள் வெற்றியைத் தரும். கொள்கைமாறி இடம் சேர்தல் நல்லதல்ல. அவதானமாக இருக்கவேண்டிய காலமாகும்.

**உத்தரம்:-**

உடல்மெலிவு, வரவை விட செலவு அதிகம், பிற்பலன் தனதானிய நன்மை உண்டாம்.

**அத்தம்:-**

அதிக முயற்சிக்கு சிறு இலாபம், திரவியநன்மை, வெளியிடத்து உதவி, அறிவு மேன்மையால் பரிசில் பாராட்டு.

**சித்திரை:-**

பதவி, தொழில் விருத்தி, அறிவால் நான்மை, பிற்பகுதி பொருள் களவு போதல், சஞ்சலம்.

# துலாம்



(சித்திரை 3ஆம், 4ஆம் பாதம், சுவாதி,
விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்கள்)

நீங்கள் வார்த்தை ஜாலமும், வசீகரமான உடல் அமைப்பும், நினைத்ததை செய்து முடிக்கும் வல்லமையும் உடையவர். சமூக வேலைகளை முடிக்கும் வல்லமையும் உடையவர். சமூக வேறுபாடு களை பாராட்டாதவராகவும், குடும்ப பொறுப்புக்களை தாங்கி செயற் படுபவராகவும் நேர்மையாளர், தர்க்கமான விளக்கத்தையும் கொடுப்ப வர்களாகவும் விளங்குவீர்கள்.

இப்புதுவருடம் உங்களுக்கு முக்கிய பொறுப்புக்கள் பண வரவுகள் அதிகரிக்கும் திருமண வாய்ப்புக்களும் உண்டு. ஆயினும் ஆனியின் பின் மந்தமான பலாபலன்களே காணப்படும். உடல் நிலையில் அவதானம் தேவை.

வியாழமாற்றத்தின் பின் குரு பன்னிரண்டாம் இடத்திற்கு வருவதால் பொன், பொருள் விரையங்கள் ஏற்படலாம். இடமாற்றங்கள் ஏற்படுடலாம். வியாழபகவானுக்கு அர்ச்சனை செய்வது நலம் தரும்.

இராகு, கேதுக்களின் அமைப்பு இலாப இடமான 11ல் வருவதனால் பணவரவு ஏற்படலாம். பிள்ளைகளால் நன்மையும் பிறருக்கான சுபமங்கள ஏற்பாடுகளை நடாத்துதலும் உருவாகலாம்.

ஐந்தில் கேது புத்திரர்களால், சகோதரர்கள் தொல்லையும், கவலையும், விரோதமும் ஏற்படலாம். போக்குவரத்தில் அவதானம் தேவை.

சனிபகவான் குடும்பத்தில் சுபகாரியங்களையும், சுபசெலவு களையும் ஏழரை என்பதால் ஏற்படுத்தலாம்.

பிறக்கும் புத்தாண்டு உழைப்புகேற்ற ஊதியத்தையும் முயற்சிக்கேற்ற பலன்களையும் வழங்கலாம்.

**உத்தியோகத்தர்:-**

பதவி உயர்வுகள், சலுகைகள், பணியிடத்தில் மதிப்பு, மரியாதை உயரும்.

**வியாபாரிகள்:-**

வியாபாரவிருத்தி, அரசவழியில் உதவிகள், பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி என்பன சிறப்பாகக் காணப்படலாம்.

**மாணவர்கள்:-**

அழகுக் கலை பயில்பவர்களுக்கு சிறப்பான காலம். உயர்கல்வி தொடருவீர்கள், கல்வியில் நாட்டம் அதிகரிக்கும்.

**பெண்கள்:-**

திருமண அனுகூலமாக அமைவதில் தடை, தாமதங்கள் உருவாகலாம். வருட முற்பகுதியில் திருமண சுபகாரிய அனுகூலமும் கல்வியில் முன்னேற்றம் உண்டாகலாம்.

**அரசியல் வாதிகள்:-**

சமூகமதிப்பும் பதவி உயர்வும் உண்டாகலாம்.

**சித்திரை:-**

காரிய அனுகூலம், தானதானியநன்மை, பிற்பகுதி சாதகமான காலமாகும்.

**சுவாதி:-**

பொருட்செலவு, காரியதாமதம், கடன்படல், பிற்பகுதி காரிய நன்மை மிகுசுகம்.

**விசாகம்:-**

திரவிய இலாபம், சினேக நன்மை, சினேக இலாபம், சரீரசுகம், தொழில் நன்மை.



# விருச்சிகம்

## (விசாகம் 4ம்பாதம், அனுஷம், கேட்டை)

உங்களை பூனை என்று நினைத்தால் புலியாக பாயும் பராக்கிரமசாலிகள். அழகான தோற்றமும் (உயரம் குறைவு) உடைய நீங்கள் கொண்ட கொள்கை நெறி தவறாதவர்களாகவும் சிலர் காணப்படுவீர்கள். புரட்சிகரமான எண்ணமும் கருத்துக்களும் உடையவர்கள்.

இவ்புதுவருடம் உங்களுக்கு குடும்பச் சிறப்பு, வாக்குவன்மை, வெகுஜன ஆதரவு, தொழில் நன்மை, புதிய சூழலில் வாழ்க்கை என்பவற்றை ஏற்படுத்துமாம்.

வியாழன்பகவான் 11ஆம் இடத்திற்கு மாறியதன் பின்பு மகிழ்ச்சியான வாழ்க்கை, தொட்டதெல்லாம் துலங்கும், நினைப்பது நடக்கும் காலமாக மாற்றுவார் குருபகவான்.

இராகு, கேதுக்களின் சஞ்சாரப்படி பதவி, பணத்துக்கு மயங்காத நீங்கள் தொழில் நிலையில் உயர்வு பெறுவீர்கள். நல்ல வெளிநாட்டுத் தொடர்பு உருவாகலாம்

கேது நான்கில் இருந்து பூமி, வாகன நன்மைகள், இடமாற்றங்கள், பிரயாணங்கள் என்பன ஏற்படுவதுடன் தாய், பெண்களால் நன்மையும் உண்டாகலாம்.

ஏமரைச் சனி நடைபெறுகின்றது. ஒருவரின் வயதைப் பொறுத்து பலன்கள் மாறுபடும். உடல் நிலையில் அவதானம் தேவை. சனிக்கிழமை சனிபகவானை அர்ச்சித்தால் சனியின் தாக்கம் குறைந்து வருஷ நற்பலனைப் பெறலாம்.

பிறக்கும் புத்தாண்டு உடல் நிலையில் புத்துணர்ச்சியும், குடும்ப குதுகலத்தையும், இராஜங்க அனுகூலத்தையும், பொருளாதார நன்மையையும் உண்டாகுமாம்.

**உத்தியோகத்தர்:-**

உயர் பதவிகள், கௌரவ பதவிகள் தேடிவரும். பொருளாதார வளம் பெருகும்.

**வியாபாரிகள்:-**

தொழில் மேன்மை உண்டாகும். தொழில் மாற்றங்கள், கடன் சுமைகள் குறைந்து சொந்த முதலீடுகள் அதிகரிக்கும்.

**மாணவர்கள்:-**

அரச ஆதரவு கிடைக்கும். பிரயாணங்கள் உருவாகும். வர்த்தகம் அல்லது கணிதம் ஆகிய துறைகளில் கற்பவர்களுக்கு நன்மை அதிகரிக்கும்.

**பெண்கள்:-**

ஆடை, ஆபரணச் சேர்க்கை, சிலருக்கு திருமண யோகம் உண்டாகும். வாழ்க்கைத்தரம் உயரும்.

**அரசியல் வாதிகள்:-**

அன்னிய தேசப் பிரயாணங்கள் ஏற்படும். பொறுப்புக்கள் ஏற்படும். செல்வம், செல்வாக்கு அதிகரிக்கும்.

**விசாகம்:-**

தொழில் நன்மை, நண்பர் களால் உதவி, தனதானிய நன்மை.

**அனுஷம்:-**

விரும்பியவை கிடைத்தல், தெய்வானுகூலம், குடும்பநன்மை, செய்தொழில் விருத்தி.

**கேட்டை:-**

யோசனை மிகுதி, அதிகபிரயாசை, அதிகசெலவு, இறுதிப்பகுதி அறிவு மேன்மை, காரியசித்தி.



# தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)

நீங்கள் மற்றவர்களுக்கு போதனை செய்பவர்களாகவும், சுயநலம் இன்றி பழகக் கூடியவராகவும் உண்மைக்கு இலக்கணமாக பழகக் கூடியவராகவும் பொதுசன மதிப்பும், எளிதில் கிரகிக்கும் ஆற்றலும் மதபற்றும், தெய்வநம்பிக்கையும் கொண்ட தனு இராசிக்காரர்களே!

புலரும் புத்தாண்டு உங்களுக்கு சமபலனையே கொடுக்கும். உடல் நிலையில் அவதானம் தேவை. குடும்ப நிலையில் அதிக அக்கறை காட்ட வேண்டிய காலமாகும்.

வியாழபகவான் பத்தாம் இடத்திற்கு பிரவேசிக்கின்றார். இக்காலம் தொழில் நிலையில் அவதானம் தேவை. பணச்செலவுகள். பொருள் விரயங்கள் ஏற்படலாம்.

இராகு, கேதுக்களின் மாற்றம் உன்னதமானதாக அமையப் பெற்றுள்ளது. இராகு ஒன்பதாம் இடத்தில் சஞ்சரித்து உடன் பிறப்புக்களின் உதவி ஒத்தாசைகளை வழங்கும். இறைவழிபாடு அதிகரிக்கலாம்.

கேது மூன்றாம் இடத்தில் சஞ்சாரம் இறைவழிபாட்டை அதிகரிக்கும். சகோதரவகையில் செலவுகளையும் நிரந்தர பதவி களையும் வழங்கலாம்.

ஏழரைச் சனி முற்கூறு நடைபெறும் காலமிது. விரையச் செலவுகள் அதிகமாகும். இரும்பு, பூமி வழியில் செலவுகளும், அவதானமும் தேவைப்படும். சனீஸ்வரனை வழிபட்டுவருவது நலம் தரலாம்.

பிறக்கும் புத்தாண்டு சமபலன் கொடுக்கும். வரவுக்கு மீறிய செலவுகளைக் காட்டலாம். குடும்பம், தொழில் என்பவற்றில் தாக்கம் ஏற்படாதிருக்க வியாழபகவானை வழிபடுவது நலம் தரும்.

**உத்தியோகத்தர்:-**

மேலதிகாரிகளை அனுசரித்து செல்லவும். சிலருக்கு புதிய பதவிகளை ஏற்கும் நிலைமாற்றம் உண்டாகலாம்.

**வியாபாரிகள்:-**

முதலீடுகளில் அவதானம் தேவை. உலோகங்கள், பூமி தொடர்பான வர்த்தகர்கள் புதிய முதலீடுகளை செய்வது நல்லதல்ல. இருக்கும் நிலையை சமாளிப்பது நலம்.

**மாணவர்கள்:-**

கல்வியில் அதிக அக்கறை காட்டவேண்டும். வெளியூர் பிரயாணங்கள், கல்வி நிலைமாற்றம் ஏற்படலாம். (அடுத்த நிலைக்காக)

**பெண்கள்:-**

குடும்ப பொறுப்பு அதிகரிக்கும். வருட ஆரம்பம் திருமண அனுகூலமும் பின் தடை தாமதங்களும் உருவாகலாம்.

**அரசியல்வாதிகள்:-**

அவதானம் தேவை. அயல் நாட்டுப் பிரயாணங்கள் உருவாகும்.

**மூலம்:-**

இனசனநன்மை, காரியஅனுகூலம், உடல் நலம், மனமகிழ்ச்சி, இறுதியில் பொருட்சேதம், காரியத்தடைகளுண்டாகும்.

**பூராடம்:-**

உடல்மெலிவு, நோய்த்தாக்கம், ஆவணியின் பின் காரியஅனுகூலம், காரிய நன்மைகள், தொழில் மேன்மை.

**உத்தராடம்:-**

தானதரும நாட்டம், கடன்படுதல், பொருட்சேதம், இறுதிப்பகுதி காரியசித்தி தொழில் நன்மை.

# மகரம்



(உத்தராடம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதம்)

நீங்கள் கடினமான உழைப்பாளிகள். சுயகாரியவாதிகள். அஞ்சாத உறுதியுடையவர்கள், சிலர் பிடிவாதக் குணம் உடைய வராகவும், சாஸ்திர சம்பிரதாய மரபுகளை மதிக்காதவர்களாகவும் காணப்படுவர். சிலர் தெய்வீக சிந்தனை உடையவராகவும் காணப்படுவர். மிகுந்த போராட்டங்களின் பின்பு காரிய சாதனைகளை செய்யக் கூடியவர்கள்.

இவ் புத்தாண்டு ஆரம்பத்தில் நன்மை, தீமை கலந்த பலன்களே. ஆவணியின் பின்பு நல்ல பலன்கள்உருவாகலாம். நிலபுலன்கள், வாகனம், புனித யாத்திரைகள் சென்றுவர வாய்ப்பு உருவாகலாம்.

வியாழபகவான் நற்பலன் செய்ய ஒன்பதாம் இடத்திற்கு வருகின்றார். இதனால் எடுக்கும் காரியங்களில் வெற்றி ஏற்படும். பதவி உயர்வுகள், நல்ல வசதியான இடமாற்றங்கள், பொன் பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி உருவாகலாம்.

இராகு, கேது கிரகங்களின் மாற்றம் எட்டில் இராகு இருப்பதனால் விரயங்கள் அதிகரிக்கும். பின்விளைவைச் சிந்திக்காமல் பேசாதீர்கள். கேதுவினால் உடன் பணிபுரிகவர்களால் பிரச்சனைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தூரதேச பிரயாணங்களைத் தனித்து மேற்கொள்வது நல்லதல்ல.

நல்லவர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களின் தன்னிச்சையான முடிவுகள் ஆபத்தைக் கொடுக்கலாம்.

சனிபகவானின் நிலை நன்மையை உண்டாக்கும். குடும்ப நன்மை, ஆடம்பரப்பொருள் சேர்க்கை, பாராட்டு விருதுகள் ஏற்பட வழி வகுக்கும்.

மகர இராசி நேயர்களுக்கு பிறக்கின்ற புத்தாண்டு காரி அனுகூலங்கள், சொத்துச் சேர்க்கை, அன்னிய உதவிகள் கிடைக்க வழி ஏற்படலாம்.

**உத்தியோகத்தர்கள்:-**

தொழில் துறையில் ஏற்றம் காண்பர். இடமாற்றங்கள் ஏற்படலாம், கல்வித் துறையினருக்கு நன்மை உண்டாகலாம்.

**வியாபாரிகள்:-**

வர்த்தக இலாபம் அதிகரிக்கும், வெப்பம், நெருப்பு, அதனுடன் தொடர்புடைய பதனிடல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு முன்னேற்ற முண்டாகலம்.

**மாணவர்கள்:-**

பரீட்சையில் நல்ல சித்தி, பாராட்டுக்கள், மருத்துவக் கல்வி கற்போருக்கு நன்மைகள் அதிகரிக்கலாம், வெளிநாட்டு யோகம் உண்டாகலாம்.

**பெண்கள்:-**

குடும்ப நிலையில் அவதானம், முற்கோபம், பாரம்பரியங்களை மதிக்காமையால் தாக்கம் ஏற்படலாம்.

**அரசியல்வாதிகள்:-**

கருத்து வேறுபாடுகள் பாராட்டாமல் இருங்கள். அவதானம் தேவை. சிலருக்கு புதிய பதவிகள் கிடைக்கப்பெறும்.

**உத்தராடம்:-**

அதிகமுயற்சிக்கு சிறுஇலாபம், கடன் அதிகரித்தல், மனக் கிலேசம், தொழில் இடத்தில் அவதானம்.

**திருவோணம்:-**

மிகுதொழில் விருத்தி நண்பர் தன்மை, தனதானிய இலாபம், இலட்சுமீகரம்.

**அவிட்டம்:-**

உடல் சோகபயம், பொருள் செலவு, வீட்டின் சலசலப்பு, ஆண்டு பிற்பகுதி காரியஅனுகூலம், தொழில் மேன்மை.



# கும்பம்

## (அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1ஆம், 2ஆம், 3ஆம் பாதம்)

நீங்கள் சுதந்திர உணர்வு உடையவர்கள். பச்சோந்திகளாக உள்ளவரையும் அநீதிகளையும் கண்டு பெறுக்க மாட்டாதவர். உறுதியான கொள்கை உடையவர். செயற்கரிய பல காரியங்களை செய்து முடிப்பவர். நட்புடன் பழகக் கூடிய சமத்துவ குணம் கொண்டவர்கள். மத நம்பிக்கை அதிகம் கொண்டவர்களாகவும் சிலர் திகழ்வர். இவர்கள் வாழ்வில் பிற்கால யோகம் உடையவர்களாகக் காணப்படுவர்.

இவ்புத்தாண்டு உங்களுக்கு நீண்டநாள் கனவுகளை நனவாக்கும். எத்துறையாயினும் அத்துறைகளில் சாதனை படைப்பீர்கள். திருமண யோகம் வருஷ முற்பகுதியில் கை கூடிவரும். சமூக அந்தஸ்து, புகழ் கூடிவரும் பொற்காலமாகும்.

வியாழமாற்றம் நற்பலன்களில் தாக்கம், ஆரோக்கியக் குறைவுகள், மனவேதனைகளையும் உருவாக்கினும், குரு, சாது, சன்னியாசிகளின் ஆசியுடன் வாழ்வில் துன்பம் கடந்து இன்பநிலை ஏற்படலாம்.

இராகு, கேதுக்கள் முறையே ஏழாம் இடம், ஜென்மத்தில் சஞ்சரித்து வாழ்வில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவார்கள். ஆன்மீக நாட்டங்கள் அதிகரிக்கும். அருளாளர்களின் தொடர்புகள் அதிகரிக்கும். கௌரவ அந்தஸ்து உயரும் நிலை உருவாகும்.

சனி பகவான் பத்தாம் இடத்தில் இருப்பதனால் கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை. நிபுனத்துவ தொழில் உயர்ச்சி உண்டாகலாம். புத்திரபாக்கிய அனுகூலம் ஏற்படலாம்.

பிறக்கும் புத்தாண்டு புது உறவுகள், நண்பர்களின் உதவி, அரச அனுகூலம், வேதனையையும் சாதனையாக மாற்றும் திறன் பாராட்டு என்பன கிடைக்கலாம்.

**உத்தியோகத்தர்கள்:-**

பதவிகள், மேலதிகாரிகளின் பாராட்டுக்கள், சம்பள பாக்கிகள், ஊக்கத்தொகை, புதிய இடத்தில் பொறுப்புக்கள் உண்டாகலாம்.

**வியாபாரிகள்:-**

வியாபாரம் விரிவடையும், வாடிக்கையாளரிடம் அவதானம் தேவை, மதிநுட்பமான தொழில்துறை உருவாக்கம் ஏற்படலாம்.

**மாணவர்கள்:-**

அறிவு சுடர்விட்டு பிரகாசிக்கும், சாதனை மாணவர்களாகத் திகழ்வீர்கள்.

**பெண்கள்:-**

திருமண அனுகூலம் எற்படும், ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகலாம், கல்வித்துறையினருக்கு மிகச் சிறப்பான காலம்.

**அரசியல்வாதிகள்:-**

தலைமையின் அனுகூலங்களைப் பெறுவீர்கள், சமூக அந்தஸ்து, பொதுமக்களின் ஆதரவுகள் பெருகும், அரச அந்தஸ்துக்கள், விழாக்களில் பங்கேற்பு உருவாகும் பொற்காலமாகும்.

**அவிட்டம்:-**

தொழில் மேன்மை, பதவி, அதிகசெலவு, நண்பர் உதவி.

**சதயம்:-**

தொழில் மேன்மை, திரவிய இலாபம், கடன்படுதல், இறுதிப்பகுதி பொருட்சேதம், காரியஅனுகூலத்தடை.

**பூரட்டாதி:-**

விரும்பியவை சித்தித்தல், பதவி உயர்வு, தெய்வானுகூலம், சரீரசுகம், நண்பர உதவி.



# மீனம்

*(பூரட்டாதி 4ஆம் பாதம்,*
*உத்தரட்டாதி, ரேவதி)*

நீங்கள் போதனை, திட்டமிடல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவீர்கள். நேர்மையும், ஆன்மீக குணமும் இருக்கலாம். சிலர் பேசாமல் அமைதியாக செயலில் ஈடுபடுவர். தனிமை விரும்பி, நாகரிகப் பொருட்கள் மீது நாட்டம் கொண்டவர்கள்.

பிறக்கும் புத்தாண்டு நற்பலன்களைத் தரும் குடும்ப மகிழ்ச்சி, சகோதரத்துக்காக உதவுதல், புதுமனைப் புகுதல், திருமண அனுகூலம், உத்தியோகம், பொருளாதாரம் சிறக்கும் காலமாகும்.

வியாழ மாற்றம் ஏழாம் வீட்டில் சஞ்சாரத்தால் திருமண அனுகூலம், பிரயாணங்கள் திட்டமிடுதல் காரியங்களில் வெற்றி, பொன் பொருள் சேர்க்கை, சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறலாம்.

இராகு, கேதுக்கள் முறையே ஆறாம், 12ஆம் இடங்களில் சஞ்சரிப்பதனால் இராகுவால் அஷ்டலக்சுமி யோகத்தை வழங்கி வாழ்வில் வசந்தம் வீசச்செய்வார். கேது சுப விரயங்களை உருவாக்கலாம். பயனங்களால் நன்மை உண்டாகலாம்.

சனி பகவான் ஓய்வின்றிய வேலைச்சுமையை அளிப்பார். ஓய்வு அவசியம். பொருட்களில் அவதானம் தேவை. இலத்திரனியல் பொருட்களின் தொடர்பாவனை உடையோர்க்கு தாக்கம் ஏற்படலாம். அவதானம் தேவை.

பிறக்கும் புத்தாண்டு நன்மைகளைத் தந்திடும். விரும்பிய இடத்திற்கு பதவி உயர்வுகள், குடியேற்றங்கள் ஏற்படலாம். பிறர் பாராட்டுக்கள் ஏற்படும். தெய்வ வழிபாடு மூலம் இன்னும் அனுகூலமான பலன்களைப் பெறலாம்.

**உத்தியோகத்தர்கள்:-**

இராஜங்க செல்வாக்கு பதவி உயர்வுகள், கௌரவம் மனநிறைவு ஏற்படுமாம்.

**வியாபாரிகள்:-**

வியாபார விருத்தி ஏற்படலாம். முதலீடுகளுக்கு அதிக நன்மைகளும் வியாபார தல விரிவுபடுத்தவும், வாடிக்கையாளர் வரவும் அதிகரிக்கும் காலமாகும்.

**மாணவர்கள்:-**

மாணவர்களின் மதிநுட்பம் வெளிப்படும். அஜீரணக் கோளாறு ஏற்படாமல் இருக்கவும், பரீட்சை வெற்றிக்கும் வியாழ பகவானை வழிபடவும்.

**பெண்கள்:-**

திருமண முயற்சிகள் கைகூடிவரும். விருந்து உபசாரங்கள், விழாக்களில் கலந்து சிறப்பிக்கும் காலமாகும்.

**அரசியல்வாதிகள்:-**

தங்கள் சுயமதிப்பு வெளிப்படும், தனவிரயங்களை பொது வாழ்வுக்காக செலவு செய்வீர்கள். வெளிநாட்டுப்பயணங்களும் ஓய்வின்றிய பொது நிகழ்வுகளில் பங்கு பற்றுதலும் உண்டாகலாம்.

**பூரட்டாதி:-**

மனமகிழ்ச்சி, தொழில் சமநிலை, காரிய அனுகூலம், பிறஇட சஞ்சாரம்.

**உத்தரட்டாதி:-**

மனயோசனை, அலைச்சல்மிகுதி, கடினமுயற்சி, இறுதிப்பகுதி காரிய சித்தி இனசன நன்மை.

**ரேவதி:-**

தனதானிய இலாபம், இனசன நன்மை, அதிக செலவு, திருமணநன்மை, காரிய அனுகூலம்.

# நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

01. மானுடமும் சோதிடமும்
02. தேவாரத் தோத்திரப் பாமாலை
03. வைரவர் வழிபாடு
04. ஆஞ்சநேயர் வழிபாடு
05. ஆடிமாதச் சிறப்புக்கள்
06. கல்வி உலகினர்க்கான தகவல் களஞ்சியம்
07. நீருயிர் வளம்
08. நீரியல் வளங்கள்
09. நீர்ப்புவியியல்
10. சித்திரப் பௌர்ணமியும், சித்திரபுத்திரனார் கதையும்
11. பிரதோஷ வழிபாடு
12. ஈழத்தில் நாகவழிபாடு
13. சிறுவர் கதை
14. புலரும் பொழுது (கவிதை)
15. மகாவாக்கியங்கள்
16. பஜனைப் பாடல்கள்
17. அரோகரா மாலை


## சோதிட சேவைகள்.

ஜாதகக் குறிப்பு எழுதல், மனையடி சாத்திரம்,
கிணற்றுக்கு நிலையம் எடுத்தல்.
திருமணப் பொருத்தம் பார்த்தல்,
சோதிட ஆலோசனைகள்.